# 8.பெலிஸ்

***இ.ஜே.சுந்தர்***




Chetumal
186
221
San Pedro
Reserva de
Biosfera Maya
Belize City
Belmopan
San Ignacio
CA13
307
Belize
Hopkins
Coxen Hole
Trujillo
Map data ©2016 Google, INEGI


N
Central America
BELIZE
GUATEMALA
HONDURAS
EL
SALVADOR
NICARAGUA

தம் மக்கள் தொகையைப்போல 3 மடங்கு மக்கள் திரண்டு சுற்றுலா வந்தும் இன்னும் கெடுக்கப்படாத சுற்றுலாத்தலம் உலகில் எது? என்ற கேள்விக்குப் பதில் பெலிஸ் என்பதாகும். எல்சால்வடார், கோஸ்டா ரீகா, கௌதமாலா, நிகராகுவா, பனாமா, பெலிஸ் ஹோண்டுராஸ், ஆகியன நடு அமெரிக்காவின் 7 நாடுகளாகும். இவற்றில் இயற்கை அன்னையின் அழகின் இரகசியத்தை இன்னும் பாதுகாக்கும் நாடு பெலிஸ் ஆகும். அதுமட்டுமன்றி நடு அமெரிக்காவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக உள்ள ஒரே நாடும் இதுதான்.

முக்கோண வடிவில் உள்ள இந்நாட்டின் வடக்கே மெக்சிகோவும், தென்மேற்கே கௌதமாலாவும், கிழக்கே கரீபியன் கடலும் எல்லைகளாய் உள்ளன. தமிழ்நாட்டின் மொத்த பரப்பில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்கு( 22,800 ச.கி.மீ) உள்ள இந்த நாட்டில் வாழும் மக்கள் வெறும் 3,47,369 பேர் மட்டுமே. ஆனால் ஆண்டுக்கு 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இவர்களில் 70% பயணிகள் அமெரிக்கர்கள். எனவே இங்கு எளிதாகச் செலவு செய்வதற்கு வசதியாக இதன் நாணய மாற்று, அமெரிக்க டாலர் ஒன்றுக்கு இரண்டு பெலிஸ் டாலர் என்று நிலையாக நிறுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா வருவோரைக் கவர்ந்திழுப்பவை பலவுண்டு. இங்குள்ள உலகத்தின் இரண்டாவது பெரிய பவழப்பாறை உலக மரபுச்சின்னமாக யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டுள்ளது. நீர் விளையாட்டுகளின் அத்தனை வகைகளையும் இங்கு அனுபவிக்கலாம்.



*கடலுக்குள் பள்ளம்*

கடற்கரையிலிருந்து 97 கி.மீ தூரத்தில் உள்ள ஓரிடத்தில் கடலில் 984 அடி விட்டமும், 407 அடி ஆழமுமுள்ள ஒரு பெரிய பள்ளம் உள்ளது. இதில் உள்ளே பாய்ந்து நீச்சலிடிப்பது அற்புதமான அனுபவம். உலகில் பாய்ந்து நீச்சலடிக்கும் மிகச்சிறந்த இடங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.



*பவழப்பாறைகள்*

கடலுக்குள் விதவிதமான அழகிய பவழப்பாறைகளும், பாரியர் ரீ்ப் எனப்படும் பவழப்பாறைகளுக்கு நடுவே மிதக்கும் 200 அழகிய தீவுகளும் இயற்கை எழிலுடன் மிளிர்கின்றன.





*அழகிய தீவு*

540 பறவையினங்களும், 400 வகை மீன்களும்,5000 வகைத்தாவரங்களும், கறுப்புநிற இரைச்சலிடும் குரங்கும் (Black howler monkey), அமாவாசையை ஒட்டி காணப்படும் ஆபத்தில்லா திமிங்கில சுறாமீனும், இந்நாட்டிற்கேயுரிய சிறுத்தையும்(Jaguar) இங்கு பயணிகளைப் பரவசப்படுத்துவன.


*இரைச்சலிடும் கருங்குரங்கு*

இந்தக் கருங்குரங்கு மிகுந்த இரைச்சலிடும் விலங்கினங்களில் ஒன்று. இது எழுப்பும் ஒலி அடர்ந்த காடுகளையும் துளைத்துக்கொண்டு 5 கி.மீ தூரத்திற்கு கேட்குமாம்.


*பெலிசிய சிறுத்தை*



*சிறுத்தைகள் காப்பகம்*

சிறுத்தைகள் மிகுந்த இந்நாட்டில் உலகில் முதல் முறையாக 1990 இல் சிறுத்தைகள் காப்பகம் (Cockscomb basin wildlife sancturary) மாயா மலைகளின் கிழக்கு சரிவில் 400 ச.கி.மீ பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.


*தேசிய மரம்*

இந்நாட்டின் தேசிய மரமான மகோகனி(Mahogany) மழைக்காடுகளில் மற்ற மரங்களின் கிளைகளைக் கடந்து ஊடுருவி பெரிய பளபளக்கும் இலைகளுடன் 100 அடி வரை ஓங்கி வளர்ந்து முடிசூடியது போல காணப்படுவதைத் தூரத்திலேயே கண்டுகளிக்க முடியும். இதில் சின்ன வெள்ளை மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூக்கும். 60-80 ஆண்டுகள் வரை இம்மரம் வாழும்.



*தேசிய பறவை*

இந்நாட்டின் தேசிய பறவையான கீல்பில்டு டவுகன்(Keel-billed toucan) என்ற ஒருவகை பழம்தின்னும் பறவை பலவண்ண சிறகுகளுடனும், உடலில் மூன்றில் ஒருபங்கு நீண்ட அலகுடனும் விசித்திரத் தோற்றத்தில் காணப்படுகிறது.



*தேசிய விலங்கு*

நாம் இதுவரை பார்த்திராத விலங்காகிய பெய்ரட்ஸ் தபீர்(Baird's tapir) என்ற மலைமாடு இந்நாட்டின் தேசிய விலங்காகும். மாடு என்று அழைக்கப்பட்டாலும் இது குதிரை, காண்டாமிருகம் ஆகிய இனத்தைச் சேர்ந்த விலங்காகும். ஏறத்தாழ 6 அடி நீளமும், 4 அடி உயரமும், 300 கிலோ எடையும் கொண்ட இது பாதுகாக்கப்படும் விலங்காகும்.

இயற்கை வளங்களைப் பேணுவதிலும், உயிரியல் பல்வகையைப் பாதுகாப்பதிலும் இந்நாடு தலைமையிடத்தில் உள்ளது. கட்டைவிரல் இல்லா மூன்று அடி உயர எல் டியூன்டே என்ற குள்ளன் காட்டில் உலாவுவதாகவும், யாராவது காட்டில் மிருகங்களை வேட்டையாடினால் அவன் அவர்களைக் கொன்றுவிடுவானென்றும்

சொல்லப்படும் கதை இந்த நாட்டு சிறுவர்கள் மத்தியில் காடுகளையும் மிருகங்களையும் பேணவேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

கடலில் உள்ள பவழப்பாறைகளில், கண்டுபிடிக்கப்பட்டவை வெறும் 10%தான். இன்னும் யார் கண்ணிலும் படாத 90% பவழப்பாறைகளின் இயற்கை இரகசியம் கண்டறியப்படவில்லை. நாட்டின் 60% நிலம் மழைக்காடுகளால் நிறைந்து அரசால் பாதுகாக்கப்படுகிறது. அனுமதியின்றி யாரும் காட்டுக்குள் நுழையமுடியாது. 20% நிலத்தில் விவசாயம் நடைபெறுகிறது. சதுப்பு நிலங்களும், கரடுமுரடான பல்வகை நில அமைப்புகளும் போக மீதி இடங்களில் தான் மக்கள் வாழ்கின்றனர். நிலத்தைக் காக்க அரசு எச்சரிக்கையாக இருப்பதால், ரியல் எஸ்டேட் தொழில் செய்ய இங்கு யாருக்கும் அனுமதியில்லை. கடலையொட்டி பெட்ரோல் எடுக்கவும் தடையுள்ளது. இங்கு வெயில் காலம், மழைக்காலம் என்ற இரண்டே காலங்கள் தான். அதிக அளவு வெப்பம் ஜூலையில் 27 டிகிரி செ; குறைந்த அளவு வெப்பம் ஜனவரியில் 24 டிகிரி செ. ஆனால் புயல்களின் தாக்கம் இந்நாட்டில் மிகுதி.

1961 இல் தலைநகர் பெலிஸ் நகரம் புயலால் பாதிக்கப்பட்டு, சீரமைக்க முடியாதவாறு சின்னாபின்னமானது. எனவே வெறும் 13,931 மக்கள் உள்ள பெல்மோபான் நாட்டின் தலைநகரமாக்கப்பட்டது. உலகிலேயே குறைவான மக்கள் தொகை கொண்ட தலைநகராக இது இருக்கக்கூடும்.

இங்கு சுற்றுலா வருவோரை ஈர்க்கும் இன்னொன்று இங்குள்ள 900 மாயா நாகரிகத்தைக் காட்டும் நினைவிடங்கள். தொன்மை உலகின் மூத்த நாகரிகங்களில் ஒன்றான மாயா நாகரிகம் தென் அமெரிக்காவில் செழித்திருந்த காலத்தில் கி.மு 1500 முதல் கி.பி 900 வரை பெலிசிலும் சிறந்தோங்கியிருந்தது.


*கராக்கோலில் உள்ள பிரமிட் வடிவ மாயா கோயில்*

பெலிசிலேயே உயரமான கட்டடம் கயோ மாநிலத்தில் உள்ள கராக்கோல் பகுதியில் உள்ள 137 அடி உயர மாயா கோயில்தான். அண்மையில் நோக்முல் என்ற இடத்தில் உள்ள 2300 ஆண்டு பழமையான மாயா பிரமிடை ஒரு கட்டுமான நிறுவனம் சாலைபோடும் கல் எடுக்க, புல்டோசரால் சிதைத்தது பெரும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.




*பிரமிட் சிதைக்கப்படல்*

16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர்கள் இந்நாட்டிற்கு வந்து ஆங்காங்கு குடியேற்றங்களை ஏற்படுத்தினர். 17, 18 வது நூற்றண்டுகளில் ஆங்கிலேயரும், ஸ்பானியர்களும் போரிட்டு இந்நாட்டைத் தம் வசப்படுத்த முயன்று இறுதியில் 1854 முதல் பிரிட்டனின் ஆளுகைக்கு இந்நாடு வந்து பிரிட்டிஷ் ஹோண்டுராஸ் என்று பெயரிடப்பட்டது. பிரிட்டனிடமிருந்து 21.09.1981 இல் விடுதலையாகி, பிரிட்டிஷ் முறையில் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி நடைபெற்றுவருகிறது. எனினும் பிரிட்டனின் தலைமையை ஏற்று எலிசபெத் ராணியே இந்நாட்டிற்கும் சிறப்புத் தலைவியாக உள்ளார். பல அரசியல் கட்சிகள் இருந்தாலும், மக்கள் ஒற்றுமை கட்சி(PUP), ஒன்றுபட்ட ஜனநாயக கட்சி(UDP) ஆகிய இரண்டே மக்கள் செல்வாக்கு பெற்றவை.



*பிரதமர் டீன் பாரோ*

2008 முதல் ஒன்றுபட்ட ஜனநாயக கட்சியினர் ஆட்சியில் டீன் பாரோ பிரதமராக உள்ளார். இந்நாட்டில் வாழும் மக்கள் பல இனத்தவர்களாவர். மெஸ்டிகோ- 48.7%, கிரியோல்- 24.9%, மாயா- 10.6%, கரி்ஃபுனோ- 6.1%, பிற மக்கள்- 9.7%. ஆங்கிலம் ஆட்சிமொழியாயினும் கிரியோல், ஸ்பானிஷ், கரி்ஃபுனோ, மாயன் மொழிகளும் வழக்கில் உள்ளன. மக்களில் 75% பேர்கள் கிறித்துவர்கள். அதிலும் பெரும்பாலோர் ரோமன் கத்தோலிக்கர். 10% பேர்கள் பிற மதத்தினர்; 15% பேர்கள் எந்த மதநம்பிக்கையும் அற்றோர். 6 வயது முதல் 14 வயது வரை கட்டாயக்கல்வி சட்டமாக்கப்பட்டுள்ளது. இதுவரை கற்றோர் எண்ணிக்கை 79.7% ஆக உள்ளது. மக்களின் சராசரி ஆயுள் 68 வயது. தனிநபர் சராசரி வருவாய் $ 8,400. விவசாயம் சார்ந்த தொழில்களே நாட்டின் முதன்மையானவை. சிறப்பாக வாழை தொடர்பான தொழில்கள் பலருக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளன. இரண்டாவதாக, சுற்றுலாத்துறை மிகுந்த வருவாயை நாட்டுக்கு வழங்குகிறது. நான்கில் ஒருவர் சுற்றுலாத் தொடர்பான தொழிலில் உள்ளார். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் வளம் புதிய வருவாய் வாய்ப்புகளை இந்நாட்டிற்கு வழங்கவுள்ளது. அமெரிக்கா, மத்திய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய யூனியன் முதலியவற்றோடு பெலிஸ் மிகுந்த வணிக உறவு கொண்டுள்ளது. தனித்தனிக் கல்லூரிகளையெல்லாம் இணைத்து 2000 இல் பெலிஸ் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு இதில் 4000 மாணவர்கள் உயர் கல்வி கற்கின்றனர்.

பல இனங்கள் உள்ள இந்நாட்டின் உணவு வகைகளும் பலதரப்பட்டன. அரிசியையும், பீன்சையும் ஒன்றாக தேங்காய்ப்பாலில் ஊறவைத்து உண்பது இங்கு வழக்கமான உணவு. அமெரிக்கப் பயணிகள் இங்கு மிகுதியாக வந்தாலும் அமெரிக்காவின் மெக்டொனால்ஸ், பர்கர்கிங், ஸ்டார்பக்ஸ், கேஎப்சி முதலிய உணவங்களை இந்நாட்டில் தொடங்க அனுமதியில்லை. இயற்கை உரத்துடன் வளரும் காய்கறிகள் எளிதாக கிடைக்கின்றன. சிறப்பு விருந்துகளில் அரச எலி(Royal rat) எனப்படும் ஒருவகை எலியை உண்கின்றனர். கிப் நட் என்று அழைக்கப்படும் இந்த கறி, முயல் மாதிரி சுவையோடு இருக்குமாம். எலிசபெத் ராணிக்கு முதலில் இது வழங்கப்பட்டதால் இதனை அரச எலி என அழைக்கின்றனர். பழங்குடி மக்கள் உடும்புக்கறியை விரும்பி உண்டு வந்தனர். இதன் எண்ணிக்கை குறைந்து வருவதால் உடும்பை வேட்டையாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.



*பெலிசிய பெண்கள்*

பெண்கள் முன்னேற்றத்தில் இந்நாடு பூமியின் மேற்கு அரைக்கோளத்தில் கடைநிலையிலேயே உள்ளது. 48.3% பெண்களே வேலைக்குச்செல்வதும், 13.3% பெண்களே நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருப்பதும் இதற்குச் சான்று. வெளிநாட்டுக்கடன், வேலைஇல்லாத் திண்டாட்டம், போதைப்பொருள் உற்பத்தி மற்றும் கடத்தல், குற்றச்செயல்கள் முதலியன இந்நாட்டிலும் நீடிக்கும் பிரச்சினைகள். அடர்ந்த காடுகள் போதைப் பயிர்களைப் பயிரிடவும், கடத்தவும் வசதியாக அமைந்துள்ளன. அமெரிக்கா வெளியிட்டுள்ள போதைப்பொருள் தயாரிப்பு, கடத்தல் நாடுகளின் பட்டியலில் பெலிஸ் இடம்பெற்றுள்ளது. 1,60,000 பெலிசியர்கள் வேலைதேடி அமெரிக்காவில் குடியேறியுள்ளனர்.


*பெலிசிய சிறுவன், சிறுமி*

பெலிசில் இந்தியர்கள் 3% அளவில் உள்ளனர். 1880 களில் கரும்பு ஆலைகளில் பணியாற்றக் கூலியாகச் சென்றவர்கள் இன்று உள்ளூர் மக்களுடன் கலந்து அடையாளம் இழந்தும் 10,000 பேர்கள் இந்துக்கள் என்று மட்டும் அழைக்கப்பட்டு வருகின்றனர். 1950 களில் வணிகத்திற்காகச் சென்ற இந்திய சிந்தி இனத்தவர் இன்று 1500 பேர்கள் வசதியுடன் வாழ்ந்து தங்கள் அடையாளங்களைக் காப்பாற்றி வருகின்றனர். இந்தியாவுடன் தொடர்பிலும் உள்ளனர். பெலிசிய இந்தியத் தூதரகம் மெக்சிகோ இந்தியத் தூதரகத்துடன் இணைந்து மெக்சிக்கோவில் இயங்குகிறது. இந்திய சிறப்புத் தூதரகம் பெலிஸ் சிட்டியிலும் இயங்குகிறது. (Indian Honorary Consulate General in Belize City c/o Mirage Store,14 Albert Street, P. O. Box 830,Belize City, Belize Phone: (+501) 227-1634 FAX (+501) 227-1221 EMAIL:indconsul.belize@gmail.com) இந்தியர்கள் பெலிஸ் செல்ல விசா தேவை. இதற்கு டில்லியில் உள்ள பெலிஸ் இந்தியத் தூதரகத்தை அணுகலாம். (Belize Consulate in New Delhi,Ground Floor 98 Modi Tower Nehru Place , New Delhi- 110 019 Phone+91-11-425-04847,Fax+91-11-264-27125 , +91-11-264-49030 , Email: belize@modigroup.com , ukmodi@modigroup.com) சென்னையிலிருந்து பெலிஸ் சிட்டி 16,421 கி.மீ தொலைவில் உள்ளது. டில்லி - நேவார்க் - பெலிஸ் சிட்டி மார்க்கமாக விமானத்தில் செல்ல ஏறத்தாழ 25 மணிநேரமாகும். கட்டணம் ரூ2,38,104. அக்டோபர் முதல் ஏப்ரல் வரை சுற்றுலாவிற்கு உகந்த காலமாகும்.

இந்நாட்டின் அழகை மனதிற்கொண்டு மாருதி சுசுகி நிறுவனம் தம் புதிய காருக்குப் பெலிஸ் எனப் பெயரிட்டுள்ளது. *(வெற்றி வேந்தன்: மார்ச் 2016)*